**செய்தி வெளியீடு எண் : 1152** **நாள் : 12.06.2023**

## செய்தி வெளியீடு

## காவிரி டெல்டா பகுதி விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து இன்று (12.6.2023) தண்ணீர் திறந்து வைத்தார்.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 10.6.2023 அன்று மாலை சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 11.6.2023 அன்று காலை சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து, சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து நேற்று மாலை சேலம் மாவட்டம், மேட்டூர் செல்லும் வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சியில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சென்ற ஆண்டு குறுவை பாசனத்திற்காக அணை வரலாற்றில் சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக மே மாதத்தில் 24.05.2022 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டு குறுவை நெல்சாகுபடியில் புதிய சாதனை படைக்கப்பபட்டது.

இன்றைய (12.06.2023) நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர்மட்ட அளவு 103.35 அடியாகவும் நீர் இருப்பு 69.252 டி.எம்.சி ஆகவும் உள்ளது. மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவை சாகுபடிக்கு 19-வது முறையாக ஜீன்-12 அன்று பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

காவிரி டெல்டா குறுவை பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜுன் 12 முதல் செப்டம்பர் 15-ஆம் தேதிவரை 5,26,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 125 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்கு மேட்டூர் அணையில் இருந்து 99.74

டி.எம்.சி தண்ணீர் வழங்கியும் மீதமுள்ள 25.26 டி.எம்.சி தண்ணீரானது மழை மற்றும் நிலத்தடி நீர் மூலமாகவும் பூர்த்தி செய்யப்படும்

குறுவை பாசனம் நாமக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, ஆகிய மாவட்டங்களில் 4,91,200 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 93.860 டி.எம்.சி தண்ணீரும், கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கு 30,800 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 5.88 டி.எம்.சி தண்ணீரும் மேட்டூர் அணையிலிருந்து தேவைப்படுகிறது.

தற்போது மேட்டூர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு இன்று ஜீன் மாதம் 12-ம் தேதி காலை வினாடிக்கு 3000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு, இன்று மாலைக்குள் படிப்படியாக வினாடிக்கு 10,000 கன அடியாக உயர்த்தப்பட்டு ஜுன் மாதம் இறுதி வரை வழங்கப்படும். ஜுலை மாதத்தில் வினாடிக்கு 10,000 கனஅடியிலிருந்து படிப்படியாக வினாடிக்கு 16,000 கன அடியாக உயர்த்தியும், ஆகஸ்ட் மாதத்தில் வினாடிக்கு 18,000 கனஅடியாகவும் நீர் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

<u>சம்பா மற்றும் தாளடி பாசனம்</u>

மேட்டூர் அணையிலிருந்து சம்பா மற்றும் தாளடி பாசனத்திற்கு, செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 வரை 12,10,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 205.60 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படும். இதற்கு அணையிலிருந்து 108.50 டி.எம்.சி தண்ணீர் வழங்கியும் மீதமுள்ள 97.10 டி.எம்.சி தண்ணீர் பருவமழை மற்றும் நிலத்தடி நீர் கொண்டும் பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையின் கீழ் பகுதியில் ஆற்றில் இருந்து சுமார் 155 குடிநீர் திட்டங்களின் மூலம் தினசரி 1707.63 மில்லியன் லிட்டர் தண்ணீர் 18 மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக ஆண்டு முழுவதும் எடுத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 40-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும் மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கும் தண்ணீர் திறந்துவிடப்படும் பொழுது அணை மின்நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும் மற்றும் சுரங்க மின்நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும் மொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையின் கீழ்பகுதியில் 7 கதவணை நீர்மின் நிலையங்கள் மூலம் 7 x 30 மெகாவாட் ஆக மொத்தம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேட்டூர் அணையில் இருந்து குறுவை, சம்பா மற்றும் தாளடி பாசனத்திற்கு செப்டம்பர் மாதத்தில் முதல் 15 நாட்களுக்கு வினாடிக்கு 15,000 கனஅடி வீதமும் அடுத்த 15 நாட்களுக்கு படிப்படியாக வினாடிக்கு 20,000 கனஅடி வீதம் வழங்கப்படும். அக்டோபர் மாதத்தில் முதல் 15 நாட்களுக்கு வினாடிக்கு 22,000 கனஅடி வீதமும் அடுத்த 15 நாட்களுக்கு நீர் தேவைக்கேற்ப வினாடிக்கு 15,000 கனஅடி வீதம் வழங்கப்படும். நவம்பர் மாதத்திற்கு தண்ணீர் தேவைக்கேற்ப வினாடிக்கு 10,000 கனஅடி வீதமும், டிசம்பர் மாதத்திற்கு வினாடிக்கு 10,000 கனஅடி வீதமும் ஜனவரி மாதத்திற்க்கு வினாடிக்கு 12,000 கனஅடி வீதமும் வழங்கப்படும். பாசன தேவையை பொருத்து அணையில் இருந்து தண்ணீர் எடுக்கும் அளவினை உயர்த்தியும் குறைத்தும் வழங்கப்படும்.

நடப்பாண்டில் காவிரி டெல்டா விவசாய பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தவும் நீர்பங்கீட்டில் நிலைமைக்கேற்ப தண்ணீரை முறைவைத்துப் பயன்படுத்த நீர்வளத்துறை அலுவலர்களுடன் ஒத்துழைக்குமாறும், மிக அதிக அளவு மகசூல் பெற்று பயனடையுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் திரு. ஆர். ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. செ. செந்தில்குமார், டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, திரு.எஸ்.ஆர். பார்த்திபன், திரு.ஏ.கே.பி.சின்ராஜ், திரு.கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இரா.இராஜேந்திரன், திரு. இரா.அருள், திரு. எஸ்.சதாசிவம், துணை மேயர் திருமதி மா. சாரதா தேவி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப., நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் திரு. இராமமூர்த்தி,ம் அரசு உயர் அலுவலர்கள், விவசாய பெருமக்கள் கலந்துகொண்டனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in